16.06.2015

# இன்றைய வேளாண் செய்திகள்

## கர்நாடகாவில் பருவ மழை

பெங்களூரு: கர்நாடகாவின் கடலோர மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது. தெற்கு பகுதிகளில் நல்ல மழையும், வடக்கு பகுதிகளில் சாதாரண மழையும் பெய்துள்ளதாக, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.'கடலோர மாவட்டம் உட்பட, மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகளில், எதிர்வரும் ஐந்து நாட்கள், கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. மழை பகுதி மற்றும் கடலோர மாவட்டங்களில், தற்போது எதிர்பார்த்த அளவு மழை பெய்யவில்லை என்றாலும், வரும் நாட்களில் மழை இருக்கும்' என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. 'மாநிலத்தில் வழக்கத்துக்கு குறைவாக பருவமழை பெய்யும் என்ற செய்திகள் சரியல்ல' என, பெங்களூரு பல்கலைக்கழக வானிலை வல்லுனர் ராஜேகவுடா தெரிவித்துள்ளார்.

## மாடுகள், கழுதை, குதிரை வளர்க்க...லைசென்ஸ்? பி.பி.எம்.பி., அரசுக்கு பரிந்துரை

பெங்களூரு: பெங்களூருவில் வளர்ப்பு நாய்களுக்கு வழங்கப்படும், 'லைசென்ஸ்' போன்று, மாடுகள், கழுதை, குதிரை உள்ளிட்ட வளர்ப்பு பிராணிகளுக்கும், லைசென்ஸ் பெறுவதை கட்டாயமாக்க வேண்டும் என, அரசுக்கு, பி.பி.எம்.பி., பரிந்துரைத்து உள்ளது. பெங்களூருவில், சாலையில் நடமாடி போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் மாடுகளுக்கு கடிவாளம் போட, பி.பி.எம்.பி., நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. 12க்கும் அதிகமான...பசு, எருமை, குதிரை, கழுதை,

பன்றி உட்பட வளர்ப்பு பிராணிகளை வளர்க்க, தேவையான கொட்டகை வசதி, தூய் மை கடைபிடிப்பு, ஆண்டுதோறும் லைசென்ஸ் புதுப்பிப்பு. நகரில் கண்ட இடங்களில், மக்கள், வாகன ஓட்டிகளுக்கு தலைவலியை ஏற்படுத்தும் மாடுகளை பிடித்து அடைத்து வைக்க இடம் அமைப்பது உட்பட, 12க்கும் அதிகமான அம்சங்களை அரசுக்கு, பி.பி.எம்.பி., பரிந்துரைத்துள்ளது.புதிதாக பசு, எருமை வாங்குபவர்களும் கூட, லைசென்ஸ் பெற வேண்டும். இல்லாவிடில் இவர்கள், வளர்ப்பு பிராணிகளை வளர்க்க முடியாது என்ற விதிமுறையும் அமல்படுத்தப் படும். ஒப்புதல்இந்த பரிந்துரைகளுக்கு, நகர அபிவிருத்தி துறை ஒப்புதல் அளித்தால், வரும் நாட்களில் அனைத்து வளர்ப்பு பிராணிகளுக்கும் லைசென்ஸ் பெறுவது கட்டாயமாகும்.பி.பி.எம்.பி., கால்நடை பிரிவு துணை இயக்குனர் நஞ்சப்பா கூறியதாவது:தெருவில் அலையும் மாடுகளை பிடித்து அடைக்க, ராஜராஜேஸ்வரி நகர், தாசரஹள்ளியில் இடம் தேடப்பட்டு வருகிறது. தற்போது பெங்களூருவில் கலசிபாளையா வில் பழமையான இடம் உள்ளது. பி.பி.எம்.பி.,யின், 198 வார்டுகளில், சாலையில் நடமாடும் மாடுகளை பிடித்து வந்து, இந்த ஒரே இடத்தில் அடைப்பது சாத்தியமில்லை. பெங்களூருவிலுள்ள பலருக்கும் பசுமாடுகள், எருமைகளை வளர்க்க போதிய இடமில்லை. அவர்கள், பாலை கறந்து விட்டு, மாடுகளை தெருவில் விடுகின்றனர். இம்மாடுகள், காய்கறி மார்க்கெட் உட்பட பல பகுதிகளில் சுற்றித்திரிந்து, கிடைப்பதை தின்று, சாலை நடுவில் அமர்ந்து பிரச்னையை ஏற்படுத்துகிறது. அபராதம் வயதான பசுக்களை வைத்து கொள்ள விரும்பாதவர்கள், அவற்றை தெருவில் விட்டுவிடுகின்றனர். இவை, உடல்நிலை பாதிக்கப்பட்டோ அல்லது விபத்துக்குள்ளாகியோ இறந்து விடுகின்றன. தெருவில் நடமாடும் பசுக்கள், கன்றுகளை பிடிப்பதற்காக, லாரி போன்ற பெரிய வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பெங்களூரு மேற்கு, தெற்கு பகுதிகளில் இரண்டு வாகனங்கள் செயல்படுகின்றன. பசு,

எருமை, கன்றுகளை அவைகளின் உரிமையாளர்கள் விடுவித்து செல்ல வேண்டுமென்றால், 300 ரூபாய் அபராதம் செலுத்த வேண்டும். மூன்று நாட்களுக்கும் அதிகமானால், அபராதத் தொகை உயரும். கழுதை, பன்றிகளுக்கு, 50 ரூபாயும், ஆடுகளுக்கு, 25 ரூபாயும் அபராதம் விதிக்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## <u>உணவு கழிவிலிருந்து மின்சாரம்5 பேரூராட்சிகளில் அமல்</u>

சென்னை:மாமல்லபுரம் பேரூராட்சியை தொடர்ந்து, மேலும், ஐந்து பேரூராட்சிகளில், உணவுக் கழிவில் இருந்து, மின்சாரம் தயாரிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரம் பேரூராட்சியில், உணவுக் கழிவில் இருந்து, தினமும், 10 கிலோவாட் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு உள்ளது; இந்த மின்சாரம் மூலம், தெருவிளக்குகள் எரிகின்றன.'இந்த திட்டம், வேலூர் மாவட்டம் - சோளிங்கர், செங்கம்; திண்டுக்கல் மாவட்டம் – வத்தல குண்டு; தேனி மாவட்டம் - உத்தமபாளையம்; கோவை மாவட்டம் - பெரியநாயக்கன்பாளையம் ஆகிய ஐந்து பேரூராட்சிகளில், 1.75 கோடி ரூபாயில் செயல்படுத்தப்படும்' என, கடந்த ஆண்டு பட்ஜெட் கூட்டத் தொடரில், உள்ளாட்சித் துறை அமைச்சர் அறிவித்தார்.அதன்படி, இத்திட்டத்தை செயல்படுத்த, பேரூராட்சிக்கு, 20 லட்சம் ரூபாய் வீதம், ஐந்து பேரூராட்சிகளுக்கு, ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு உள்ளது.இந்த நிதியில் திட்டப் பணிகள் துவக்கப்பட்டுள்ளன என, துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## <u>தூத்துக்குடியில் அனல் மின் நிலைய 2 வது அலகில் மின் உற்பத்தி துவக்கம்</u>

தூத்துக்குடி: தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் 2 வது அலகில் பழுது ஏற்பட்டதால், சரி செய்யப்பட்டு நேற்று அதிகாலை 4.25 முதல் மின் உற்பத்தி துவக்கப்பட்டது.ஐந்து அலகுகள்: தூத்துக்குடியில் மின்

வாரியத்திற்கு சொந்தமான அனல் மின் நிலையம் உள்ளது. ஒரு அலகில் இருந்து 210 மெகாவாட் வீதம், ஐந்து அலகுகளில் ஆயிரத்து 50 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.இதில் முதல் மூன்று அலகுகள் 34 ஆண்டுகளுக்கு மேலாகவும், 4,5 வது அலகுகள் 22 ஆண்டுகளுக்கு மேலாகவும் மின் உற்பத்தி செய்து வருகிறது. இதன் ஆயுள் காலம் 20 ஆண்டுகள் முடிந்த பின்னரும், தொடர்ந்து மின் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.2வது அலகு பழுது: ஜூன் 13 ல் காலை 8.30 மணிக்கு இரண்டாவது அலகில் பாய்லர் பஞ்சர் ஏற்பட்டு மின் உற்பத்தி பாதிக்கப்பட்டது. இந் நிலையில் மின் வாரிய ஊழியர்கள் பராமரிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். ஜூன் 14 ல் பழுது சரி செய்யப்பட்டது. மின் தேவை தமிழகத்தில் குறைவாக இருந்ததால் மின் உற்பத்தி செய்யப்படாமல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. நேற்று அதிகாலை 4.25 மணிக்கு 2 வது அலகில் மீண்டும் மின் உற்பத்தி துவக்கப்பட்டது. இதனை தொடர்ந்து ஐந்து அலகுகளில் இருந்து 1,050 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்பட்டது. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் மின் உற்பத்தி சீராகியுள்ளது.

## <u>கோடை மழையால் எள் விளைச்சல் அமோகம்:ஒரே நாளில் 1,200 மூட்டை விற்பனைக்கு வரத்து</u>

கோபி:இந்தாண்டு கோடை மழையால் எள் உற்பத்தி அதிகரித்து, மைலம்பாடி ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில், ஒரே நாளில், 1,200 எள் மூடைகள் விற்பனைக்கு குவிந்தது.ஈரோடு மாவட்டத்தில் பவானி, அந்தியூர், அம்மாபேட்டை மற்றும் நாமக்கல், சேலம் மாவட்டங்களுக்கு உட்பட்ட மேட்டூர், கொளத்தூர், சங்ககிரி, எடப்பாடி, கொங்கனாபுரம், தேவூர், பூலாம்பட்டி, கல்வடங்கம், கோனேரிபட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆண்டு தோறும் இறவை மற்றும் மானாவரி நிலங்களில், அதிக அளவில் எள் பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. குறைந்த நீர்,

குறுகிய நாட்களில் சாகுபடி செய்யப்படும் எள், குறைந்த மூலதனம் இருந்தால் போதுமானது. 100 நாளில் அறுவடைக்கு தயிராகிவிடும். முக்கிய எண்ணெய் வித்து பயிரான எள்ளுக்கு, ஆண்டு தோறும் மார்க்கெட்டில் கிராக்கியும், நல்ல விலையும் கிடைத்து வருகிறது. நடப்பாண்டு கோடை மழை பரவலாக பெய்ததால், ஈரோடு, நாமக்கல், சேலம் மாவட்ட மானாவரி விவசாயிகள், கோடை மழையை பயன்படுத்தி, எள் பயிரிட்டனர். கோடைமழையால், எள் விளைச்சல் கணிசமாக அதிகரித்துள்ளது. கடந்த நான்கு வாரங்களாக எள் அறுவடை சீசன் அமோகமாக உள்ளது.உற்பத்தியான எள் மைலம்பாடி ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் குவிகிறது.இந்த வாரம் மைலம்பாடி ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு, ஒரே நாளில், 1,200 மூட்டை எள் விற்பனைக்கு வந்திருந்தது. டெண்டர் மூலம் எள் ஏல விற்பனை செய்யப்பட்டது. வெள்ளை எள் கிலோ, 87.19 முதல், 63.89 ரூபாய்க்கும், கருப்பு எள் கிலோ, 87.07 முதல், 52.09 ரூபாய்க்கும், சிவப்பு ரக எள் கிலோ, 54.09 முதல், 35.89 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டன. இது குறித்து, மைலம்பாடி ஒழுங்கு முறை விற்பனை கூட கண்காணிப்பாளர் (பொறுப்பு) மகேந்திரசிங் கூறியதாவது;நடப்பாண்டு கோடை மழை பரவலாக பெய்ததால், மானாவாரியில் எள் விளைச்சல் அதிகரித்துள்ளது. கடந்த, 4 வாரங்களாக ஒழுங்கு முறை விற்பனை கூடத்துக்கு, ஈரோடு, நாமக்கல், சேலம் மாவட்டங்களுக்கு உட்பட்ட பல்வேறு ஊர்களில் இருந்து, வாரம் தோறும், 2,000க்கும் மேற்பட்ட மூட்டை எள், விற்பனைக்கு வருகிறது. இதில் வெள்ளை ரக எள், மிட்டாய், பருப்பு தயரிக்கவும் ஏற்றது. மைசூர் வியாபாரிகள் பெருமளவில் வெள்ளை எள்ளை கொள்முதல் செய்கின்றனர்.பல்வேறு மாவட்டங்களில் இருந்து, 25க்கும் மேற்பட்ட வியாபாரிகள், 1,000 விவசாயிகள்

வந்திருந்திருந்தனர். நேற்று ஒரே நாளில், 1 கோடி ரூபாய்க்கு எள் வர்த்தகம் நடந்தது. இவ்வாறு, அவர் கூறினார்.

## ஜூன் 24ல் காய்கறிபதப்படுத்தும் பயிற்சி

பனமரத்துப்பட்டி:"சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையத்தில், பழம் மற்றும் காய்கறிகள், பதப்படுத்தி, ஜாம், ஜெல்லி தயாரித்தல் குறித்த, ஒரு நாள் செயல்விளக்க பயிற்சி, வரும், 24ம் தேதி நடக்கிறது' என, திட்ட ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீராம் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை:பழங்கள் மற்றும் காய்கறிகளில், உயிர் சத்து, நீர் சத்து, ஊட்டச்சத்து, நார்ச்சத்து, நோய் எதிர்ப்பு சத்துகள் நிறைந்துள்ளன. பழம், காய்கறிகள் ஒரு சில பருவ காலங்களில் மட்டும் அதிகம் விளைந்து, அழுகி வீணாகிவிடுகிறது. பழம், காய்கறி ஆகியவற்றை பதப்படுத்தி, விற்பனை செய்தால், அதிக லாபம் ஈட்ட முடியும். இதிலிருந்து பானம், ஜாம், ஜெல்லி ஆகியவை தயாரிக்கலாம். இதுகுறித்து, நேரடி செயல் விளக்க பயிற்சி, வரும், 24ம் தேதி, சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடக்கிறது. பயிற்சி கட்டணமாக, 300 ரூபாய் செலுத்த வேண்டும். பயிற்சியில் பங்கேற்க, நேரில் அல்லது 0427-2422550 எண்ணில், தங்கள் பெயரை முன் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

இவ்வாறு, கூறியுள்ளார்.

## உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ்உதவி தொகை ஆணை வழங்கல்

விழுப்புரம்: புற்றுநோயால் பாதிக்கப்பட்ட இருவருக்கு, உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெறுவதற்கான ஆணையை டி.ஆர்.ஓ., பிருந்தாதேவி வழங்கினார். விழுப்புரம் அடுத்த சாத்திப்பட்டு கிராமத்தை சேர்ந்தவர் நாராயணசாமி, 65. தொண்டை புற்றுநோயால், பாதிக்கப்பட்ட இவர் மாதாந்திர உதவித்தொகை வழங்கக்கோரி விண்ணப்பித்திருந்தார். இதேபோன்று, புற்று நோயால் பாதிக்கப்பட்ட கண்டமங்கலம் ஒன்றியம் என்.ஆர்., பாளையம் சொக்கலிங்கம் மனைவி

செல்வராணி, 47 என்பவரும், விண்ணப்பித்திருந்தார்.விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்த வாராந்திர குறைகேட்பு கூட்டத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட இருவருக்கும், உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் மாதாந்திர உதவித்தொகை வழங்குவதற்கான உத்தரவை டி.ஆர்.ஓ., பிருந்தாதேவி நேற்று வழங்கினார். சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் சுந்தரராஜன், வருவாய் ஆய்வாளர் புருஷோத்தமன், மூர்த்தி ஆகியோர் உடனிருந்தனர்.

## வளம் மீட்பு பூங்காவில் காய், கனி தோட்டம்

வாலாஜாபாத்: பேரூராட்சியில் தரம் பிரிக்கப்படும் குப்பை எருவை பயன்படுத்தி, பேரூராட்சி துப்புரவு பணியாளர்கள் சொந்த முயற்சியில், காய், கனி பயிர்களை பயிரிட்டு, பேரூராட்சிக்கு வருவாயை ஈட்டி தருகின்றனர். வாலாஜாபாத் பேரூராட்சியில், கொட்டவாக்கம் ஏரியை ஒட்டி, பேரூராட்சிக்கு சொந்தமான குப்பை தரம் பிரிக்கும் வளம் மீட்பு பூங்கா அமைக்கப்பட்டு உள்ளது. இந்த பூங்காவில் தரம் பிரிக்கப்படும் மக்கும் எருவை பயன்படுத்தி, பேரூராட்சி துப்புரவு பணியாளர்கள், காய்கனி மற்றும் மலர்; கம்பு; மக்காச்சோளம் ஆகியவை பயரிட்டு உள்ளனர். இதில் கிடைக்கும் வருவாயை, பேரூராட்சி நிர்வாகத்திடம் ஒப்படைப்பதாக, பேரூராட்சி துப்புரவு பணியாளர்கள் தெரிவித்தனர். இதுகுறித்து, துப்புரவு பணியாளர்கள் கூறுகையில், 'சிறிய இடத்தில் தோட்டக்கலை பயிர்களை பயிரிட்டு உள்ளோம். நன்கு வெற்றி அடைந்த பின், சாகுபடி பரப்பளவு அதிகரிக்கப்படும்' என்றனர்.

## தீவன உற்பத்தி அதிகரிப்பு: வனத்துறை அதிகாரி தகவல்

ஈரோடு:அந்தியூர் வனப்பகுதியில் பயிரிடப்பட்ட தீவன உற்பத்தி, ஆரோக்கியமான முறையில் வளர்ந்துள்ளதாக, அந்தியூர் வனப்பகுதி ரேஞ்சர் ராஜமாணிக்கம் தெரிவித்தார். இது குறித்து, ரேஞ்சர்

ராஜமாணிக்கம் கூறியதாவது:அரசு, 13ம் ஆண்டு நிதிக்குழு திட்டத்தின் கீழ், பல்வேறு பணிகளுக்காக, நிதி ஒதுக்கியுள்ளது. அதில், கண்காணிப்பு கோபுரம் அமைத்தல், பராமரிப்புப்பணிகள், தீவன பயிர்கள் உற்பத்தி என பல பணிகள் உள்ளன.அந்தியூர் வனப்பகுதியில் சிறுத்தை, புலி, யானை, மான், காட்டுக்கோழி, மலைப்பன்றி, கொம்பு மான்கள் என பல விலங்குகள் உள்ளன.வனத்தில் இருந்து, வறட்சி காலத்தில் விலங்குகள் திறந்த வெளிப்பகுதிக்கு வராதவாறு தடுக்க, ஏற்கனவே வனத்துறை சார்பில், தீவன உற்பத்தி செய்ய, வனத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.அதன்படி, கடந்தாண்டு, 10 ஏக்கரில் வரட்டுப்பள்ளம் பகுதியில், விலங்குகளுக்காக தீவன உற்பத்தி பயிர்கள் நடவு செய்யப்பட்டன. அதற்காக அரசு, இரண்டு லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கியது. தீவனப்பயிர்கள் நன்றாக வளர்ந்துள்ளன. யானைகள் சாப்பிடக்கூடிய வேம்பு, பலா, அரசு, விளாம்பழம் என பல வகை மரப்பயிர்களையும் பராமரித்து வருகிறோம்.இருப்பினும், இளம் பயிர்களாக உள்ள தீவனப்பயிர்களை, அடிக்கடி யானைகள் கூட்டம் வந்து, நாசம் செய்து விடுகிறது. ஓரிரு ஆண்டுகள் ஆனப்பிறகு, தீவனப்பயிர்கள் நன்றாக செழித்து வளர்ந்து விடும்.தற்போது பெய்த கோடை மழையால், தீவனங்களுக்கு தண்ணீர் பற்றாக்குறை இல்லை. வனப்பகுதியிலும், விலங்குகளுக்கு தேவையான உணவுகள் உள்ளன.இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

## 'அசோலா செடி' வளர்ப்பு வேளாண்துறை பயிற்சி

பந்தலுார் :வேளாண்மை துறை சார்பில், அசோலா (தீவினச்செடிகள்) வளர்ப்பு குறித்து, சிறப்பு பயிற்சி வழங்கப்பட்டது. கூடலுார் தோட்டக்கலைத் துறையின் வேளாண்மை தொழில் நுட்பத்துறை சார்பில், பந்தலுார் உப்பட்டி, சேலகுன்னு பகுதி விவசாயிகளுக்கு, அசோலா (தீவனச்செடிகள்) வளர்ப்பு குறித்த பயிற்சி முகாம் நடந்தது.

வட்டார தொழில் நுட்ப மேலாளர் யமுனா பிரியா வரவேற்றார். உதவி தோட்டக்கலைத் துறை இயக்குனர் சிபிலா மேரி தலைமை வகித்தார். சேரம்பாடி அரசு கால்நடை டாக்டர் பிரபு, 'அசோலா செடிகள் வளர்ப்பு' குறித்து விவசாயிகளுக்கு செயல்முறை பயிற்சி அளித்தார். முகாமில், 30க்கு மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். உதவி தொழில்நுட்ப மேலாளர் பானுப்ரியா நன்றி கூறினார்.

## ஒரு மாதமாக நிரம்பி வரலாறு படைத்தது வரதமாநதி அணை

பழநி:கொடைக்கானல் மலைப்பகுதியில் பெய்த மழையால், பழநி வரதமாநதி அணை நிரம்பி உபரி நீர் ஒருமாதமாக வெளியேறி புதிய வரலாறு படைத்துள்ளது.எழில் கொஞ்சும் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில், காண்போர் கண்களுக்கு பசுமை விருந்து அளிக்கும் வரதமாநதி அணை 1979ல் கட்டப்பட்டது. பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ளது. பழநிவரும் சுற்றுலா பயணிகள், உள்ளூர்வாசிகள் குடும்பத்தினருடன் இங்குள்ள பூங்காவிற்கு வந்து பொழுது போக்குகின்றனர். சனி, ஞாயிறுகளில், இங்கு வருவோர் எண்ணிக்கை அதிகரிக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக போதிய மழையில்லாமல் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகள் வறண்டன. வரதமாநதி அணை கடந்த 2014 அக்டோபரில் காட்டாற்று வெள்ளத்தால் இரண்டுமுறை நிரம்பி உபரிநீரை வெளியேற்றியது. கடந்த மே 15ல் கொடைக்கானல் மலைப்பகுதி, பழநிபகுதியில் இரவுமுழுவதும் பெய்த கனமழையால் வரதமாநதி அணைக்கு (மொத்தஉயரம் 67அடி) வினாடிக்கு 1050 கனஅடி தண்ணீர் வந்து, ஒரேநாளில் நிரம்பியது. உபரிநீர், ஆயக்குடி பெரியகுளம், வையாபுரி, இடும்பன்குளத்திற்கு சென்றது. அன்று முதல் பலநாட்கள் கொடைக்கானல் மலையில் மழை பெய்து பின் குறைந்துவிட்டது. இதையடுத்து வரத்து நீரும் 1050ல் இருந்து படிப்படியாக குறைந்துது இன்று வரதமாநதி அணைக்கு வினாடிக்கு 15 கனஅடி தண்ணீர் வருகிறது. தொடர்ந்து நிரம்பி வழியும்

அணையில் இருந்து அதே அளவு தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. இதனால் அணையை அடுத்துள்ள இடும்பன்குளம், வையாபுரிகுளம், சிறுநாயக்கன்குளம், பாப்பாகுளம், ஆயக்குடி பெரியகுளம், டி.கே.என்.குளம், பொன்னாபுரம் குளம், வீரகுளம், உட்பட 10 குளங்கள் நிரம்பியுள்ளன. தொடர்ந்து ஒரு மாதமாக அணைநிரம்பி உபரிநீர் வெளியேறுவதால் விவசாயிகள், நெல்,கரும்பு, மக்காசோளம் பயிரிட்டு வருகின்றனர்.பொதுப்பணித்துறையினர் கூறுகையில்,"" வரதமாநதி அணை இந்தமாதிரி ஒருமாதம் நிரம்பி உபரிநீர் வெளியேறியதாக பதிவு எதுவும் இல்லை. அதுவும் கோடைகாலத்தில் ஒருமாதமாக வரதமாநதி அணை நிரம்பி உபரிநீர் வெளியேற்றப்படுவது புதிய சாதனை தான் ," என்றார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**<u>வேளாண்மைப் படிப்புகளில் சேர 29 ஆயிரம் பேர் விண்ணப்பம்: ஜூன் 20-இல் தரவரிசைப் பட்டியல் வெளியீடு</u>**

தமிழகத்தில் வேளாண்மைப் படிப்புகளில் சேர 29,825 பேர் விண்ணப்பித்துள்ளனர். இதையடுத்து, ஜூன் 20-ஆம் தேதி (சனிக்கிழமை) தரவரிசைப் பட்டியல் வெளியிடப்படுகிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், அதன் இணைப்பு, உறுப்புக் கல்லூரிகளில் இளம் அறிவியல் பிரிவில் வேளாண்மை, தோட்டக்கலை, வனவியல் உள்ளிட்ட 6 படிப்புகளும், இளம் தொழில்நுட்பப் படிப்புகளில் உயிர்த் தொழில்நுட்பவியல், உயிர்த் தகவலியல் உள்ளிட்ட 7 படிப்புகளும் உள்ளன. இளம் அறிவியல் பிரிவில், உறுப்புக் கல்லூரிகளில் 915 இடங்களும், இணைப்புக் கல்லூரிகளில் 1,080 இடங்களும், இளம் தொழில்நுட்பப் படிப்புகளில் 305 இடங்களும் என

மொத்தம் 2,300 இடங்கள் உள்ளன. வரும் கல்வியாண்டுக்கான மாணவர் சேர்க்கைக்கு மே 15-ஆம் தேதி விண்ணப்பங்கள் விநியோகம் தொடங்கியது. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை ஜூன் 13-ஆம் தேதிக்குள் அனுப்ப வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஜூன் 13-ஆம் தேதி வரை 33,910 விண்ணப்பங்கள் ஆன்லைன் மூலமாகப் பதிவிறக்கம் செய்யப்பட்டிருந்தன. அதில், 29,825 பேர் படிவங்களை பூர்த்தி செய்து, உரிய கட்டணம் செலுத்தி விண்ணப்பித்துள்ளனர். இது, கடந்த ஆண்டை விட 2,000 குறைவாகும். இதற்கிடையே விண்ணப்பங்களை பூர்த்தி செய்து அனுப்பியவர்கள் அதில் உள்ள தவறுகளைச் சரி செய்து கொள்ள செவ்வாய்க்கிழமை (ஜூன் 16) மாலை வரையிலும் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து, விண்ணப்பங்களை பரிசீலிக்கும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது. இதையடுத்து, ஜூன் 20-ஆம் தேதி தரவரிசைப் பட்டியல் வெளியிடப்படவுள்ளது. ஜூன் 27-ஆம் தேதி விளையாட்டுப் பிரிவினர், மாற்றுத்திறனாளிகளுக்கான கலந்தாய்வு நடைபெறவுள்ளது. பொதுப் பிரிவினருக்கான முதல் கட்டக் கலந்தாய்வு ஜூன் 29 முதல், ஜூலை 11 வரையும், 2-ஆம் கட்டக் கலந்தாய்வு ஜூலை 15 முதல் 17-ஆம் தேதி வரையிலும் நடைபெற உள்ளது.

**தமிழகம், புதுச்சேரியில் இன்று மழை வாய்ப்பு**

வெப்பச் சலனம் காரணமாக, தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் ஒரு சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி கூறியதாவது: தமிழகத்தில் கடந்த ஒரு வாரமாக ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் ஒரு சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். சென்னை மாநகரைப் பொருத்தவரை, வானம்

மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில், மாலை அல்லது இரவு நேரத்தில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றார்.

## உளுந்து சாகுபடிக்கு விதைப் பரிசோதனை

உளுந்து சாகுபடிக்கு தயாராகும் விவசாயிகள், விதைகளைப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்று காஞ்சிபுரம் விதை பரிசோதனை அலுவலர் பெருமாள் கூறினார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஆனி, ஆடி மாத பட்டத்தில் மானாவாரி இறவை உளுந்து பயிர் சாகுபடி செய்வதற்கு ஏற்ற பருவமாகும். உளுந்து விதைகளை பொருத்தவரையில் முளைப்பு திறன் 75 சதவீதத்துக்கு அதிகமாகவும், ஈரப்பதம் 8 சதவீதத்துக்கு குறைவாக இருப்பது மிக அவசியம். வம்பன் 1, 2, 3, 4, 5, 6, 7 ஆகிய உளுந்து ரகங்களின், தரமான குறைந்தபட்சம் 75 சதவீத முளைப்பு திறன் கொண்ட விதைகளைப் பயன்படுத்தி 30 செ.மீ.க்கு 10 செ.மீ. இடைவெளிவிட்டு விதைக்க வேண்டும். இதை கடைபிடித்தால் 20 சதவீதம் மகசூல் கிடைக்கும். எனவே, விவசாயிகள் தங்களிடமுள்ள விதை 75 சதவீத முளைப்பு திறன் உள்ளதா என உறுதி செய்துகொள்ள 100 கிராம் மாதிரியை "விதை பரிசோதனை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், காஞ்சிபுரம்' என்ற முகவரிக்கு அனுப்பி விவரங்களைப் பெற்று பயன்பெறலாம். இதற்கு ரூ. 30 கட்டணம் வசூலிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## வெங்காயம் சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம்

தற்போது சின்ன வெங்காயத்திற்கு நல்ல விலை கிடைப்பதால் ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், சிவகிரி பகுதி விவசாயிகள் வெங்காயம் சாகுபடி செய்வதில் அதிக ஆர்வம் காட்டிவருகின்றனர்.

ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், சிவகிரி வட்டாரப் பகுதியில் பெரும்பாலான விவசாயிகள் கோடையில் சித்திரை பட்டத்தில் சின்ன

வெங்காயம் அதிகளவில் பயிரிடுவர். கடந்த ஆண்டு வெங்காயம் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு போதிய விலை இல்லாமல் போனதால் உரிய செலவு தொகையைக்கூட எடுக்கமுடியாமல் பெரும் நஷ்டத்தை சந்தித்தனர். கடந்த ஆண்டு தமிழ்நாடு, ஆந்திரம், கர்நாடகாவில் இருந்து அதிகளவில் வெங்காயம் வந்ததால் போதிய விலை இல்லாமல் போனது. தற்போது வெங்காயம் அதிக அளவில் சந்தைக்கு வந்தாலும் விலை கிலோ ரூ 25 முதல் ரூ 35 வரைஇருப்பதால் விவசாயிகள் சின்ன வெங்காயம் சாகுபடி செய்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். ஆவணி மாதத்தில் வெங்காயத்திற்கு உரிய விலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் ஆர்வத்துடன் வெங்காயம் பயிரிட்டு வருகின்றனர். விதை வெங்காயம் ராஜபாளையம் வெங்காய கமிஷன் கடை, திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், துரையூர், பகுதிகளில் இருந்து அதிகம் வரவழைக்கப்பட்டு பயிர் செய்யப்படுகிறது. வெங்காய சாகுபடிக்கு அதிகம் செலவாகிறது. தரமான விதை வெங்காயம் விலையும் அதிகமாக உள்ளது. இருப்பினும் இதற்கு ஈடாக விலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் வெங்காய சாகுபடியில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டிவருகின்றனர்.

## விவசாயிகள் விழிப்புணர்வுக் கூட்டம்

கோபி அருகே குள்ளம்பாளையத்தில், கொடிவேரி அணைக்கட்டு திட்டம் டி-6 பாசன சபை பொதுக்குழு மற்றும் விவசாயிகள் விழிப்புணர்வுக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது. கூட்டத்துக்கு, பாசன சபை தலைவர் கே.ஏ.காளியப்பன் தலைமை வகித்தார். துணைத் தலைவர் கே.கே.ரவீந்திரன் முன்னிலை வகித்தார். இதில், கொடிவேரி பாசனத் திட்டத்திற்கு சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள ரூ. 40 கோடி ஒதுக்கிய தமிழக அரசுக்கும், முதல்வருக்கும் நன்றி தெரிவிப்பது, தடப்பள்ளி பாசன வாய்க்காலில் பழுதடைந்த மதகுகளை சரிசெய்தல் மற்றும் பாசன பரப்பு குழாய் அளவு விவரங்களை எழுத பொதுப்பணித்

துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.தடப்பள்ளி வாய்க்கால் சீரமைப்பு பணிகளை விரைவாக மேற்கொள்ள வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது. இதில், தலைவராக கே.ஏ.காளியப்பன், துணைத் தலைவராக கே.கே.ரவீந்திரன், செயலாளராக கே.ஆர்.சண்முகம், இணைச் செயலாளராக பி.எஸ்.சங்கிலித்துரை, பொருளாளராக டி.நாராயணசாமி உள்ளிட்டோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**<u>விதை பரிசோதனை அவசியம்: வேளாண்மைத்துறை அறிவுறுத்தல்</u>**

நீலகிரியில் விவசாயத்துக்கு விதை பரிசோதனை அவசியம் என வேளாண்மைத் துறை அறிவுறுத்தியுள்ளது. இதுதொடர்பாக உதகை விதை பரிசோதனை நிலையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: நீலகிரியில் உருளைக்கிழங்கு, கேரட், முட்டைக்கோஸ், பீன்ஸ் போன்ற மலைக்காய்கறிகள் பயிரிடப்படுகின்றன. பருவமழையை எதிர்நோக்கி தங்கள் தோட்டங்களை சீர்படுத்தும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். இதில் மலைக்காய்கறி விதைகளின் முளைப்புத்தன்மை, புறத்தூய்மையை ஆய்வு செய்து, அதன் பின்னரே பயிரிட வேண்டும். பட்டாணி, பீன்ஸ் விதைகளின் முளைப்புத்திறன் 74 சதவீதம் இருக்க வேண்டும். அதேபோல, முட்டைக்கோஸ், முள்ளங்கி, டர்னிப் விதைகளில் முளைப்புத்திறன் 96 சதவீதமும், காலிபிளவர் மற்றும் புரொக்கொலியில் 65 சதவீதமும், கேரட்டில் 60 சதவீதமும் முளைப்புத் திறன் இருக்க வேண்டும். விதைப் பரிசோதனை முடிவுகள் 7 நாள்களுக் குள் அவரவர் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும். விதை பரிசோதனைக்கு கட்டணமாக ரூ.30 மட்டும் வசூலிக்கப்படும். எனவே, நீலகிரி விவசாயிகள் விதைகளை பரிசோதனை செய்த பின்னரே பயிர் செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## <u>வெம்பாக்கம் வட்டார விவசாயிகள் கவனத்துக்கு...</u>

வெம்பாக்கம் வட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் பயன்பெறும் வகையில் இடுபொருள்கள், உயிரி உரம் நுண்ணூட்டச் சத்து, பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன என்று வேளாண்மை உதவி இயக்குநர் கோ.பாண்டியன் தெரிவித்தார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் வெம்பாக்கம் வட்டத்தில் சிறுதானியங்கள் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக ஒரு ஏக்கருக்கு ரூ. 3 ஆயிரம் வீதம் மானியத்தில் விவசாயிகளுக்கு சிறுதானிய இடுபொருட்கள் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயிர்சுழற்சி முறையாக மணிலா, பயறு வகைகளுக்குத் தேவையான உயிர் உரம் நுண்ணுட்டச் சத்து பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் ஆகியவை ஒரு ஏக்கருக்கு ரூ.7 ஆயிரம என்ற அளவில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய தயார் நிலையில் இருப்பு உள்ளது. தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயறுவகைகள் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக ஜிப்சம் 50 சதவீதம் மானியத்தில் விநியோகிப்பதற்கு, அனைத்து வெம்பாக்கம் வட்டார வேளாண் விரிவாக்க மையங்களிலும் போதுமான அளவு இருப்பு உள்ளது. இதனை விவசாயிகள் பயன்படுத்திப் பயன் அடையலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## <u>வரும் 19-ம் தேதி விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம்</u>

வரும் 15-ம் தேதி விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் நடைபெற உள்ளது. இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி வெளியிட்ட செய்திக்குறிப்பு: கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஜூன் மாதத்திற்கான நடைபெற உள்ள விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள், விவசாய சங்க உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இதில் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த மனுக்கள் மட்டும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

## தலைஞாயிறில் குறுவை தொகுப்பு உதவித் திட்டம் தொடக்கம்

நாகை மாவட்டம், வேதாரண்ய்ததை அடுத்த தலைஞாயிறு வட்டாரம் பாங்கல் கிராமத்தில் தமிழக அரசின் குறுவை தொகுப்பு உதவித் திட்ட செயலாக்கம் ஞாயிற்றுக்கிழமை தொடங்கிவைக்கப்பட்டது. தமிழக அரசின் குறுவை தொகுப்பு உதவித் திட்டத்தின் ஒரு பகுதியாக தரிசு உழவு, பசுந்தாள் உரப்பயிர் விதைப்புக்கு வகை செய்யப்படுகிறது. வேளாண் பொறியியல் துறை மூலம் உழுவை இயந்திரம், தரிசில் விதைக்க வேளாண்துறை மூலம் ஏக்கருக்கு 20 கிலோ சணப்பு விதை அளிக்கப்படுகிறது. பாங்கல் கிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு அந்த ஊராட்சித் தலைவர் ஏ. கோவிந்தராசு தலைமை வகித்தார். நாகை மாவட்ட வேளாண் துணை இயக்குநர் (மாநிலத் திட்டம்) த .கணேசன் திட்டத்தை தொடக்கிவைத்தார். வேளாண் உதவி இயக்குநர் ந. சந்திரகாசன், வேளாண் பொறியல்துறை உதவி பொறியாளர் அரவிந்தன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## கோழிப் பண்ணைகள் அமைக்க விரும்புவோர் விண்ணப்பிக்கலாம்

திருவாரூர் மாவட்டத்தில் கோழிப் பண்ணை அமைக்க விரும்புவோர் விண்ணப்பிக்கலாம் என ஆட்சியர் எம். மதிவாணன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: 2015-16 நிதியாண்டில் மாவட்டத்தில் 160 கோழிப்பண்ணைகள் அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. 250 கோழிக் குஞ்சுகள் கொண்ட பண்ணை அமைக்க மொத்த திட்ட மதிப்பீடு ரூ.1,29,500 ஆகும். வங்கி மூலம் கடன் பெற்று பண்ணை தொடங்குபவர்களுக்கு தமிழக அரசு மானியமாக ரூ. 32,375, பண்ணையை தொடா்ந்து நடத்துவோருக்கு ஊக்கத்தொகையாக ரூ. 5,000, பண்ணையை பாதியில் விட்டுவிடாமல் நடத்துவோருக்கு நபார்டு வங்கி மூலம் ரூ.32,370 என ரூ.69,750 மானியமாக வழங்கப்பட உள்ளது.

வங்கிக் கடன் பெறாமல் சுயநிதியில் கட்டடம் கட்டி பண்ணை நடத்துபவா்கள் இத்திட்டத்தில் தகுதி அடிப்படையில் சேர்க்கப்பட்டால் அவா்களுக்கு மாநில அரசால் வழங்கப்படும் மானியம் ரூ.37,375 வழங்கப்படும். கோழிப்பண்ணை நடத்த கொட்டகை அமைக்கும்போது கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் அங்கீகரித்த வடிவமைப்பில் இருக்க வேண்டும். அரசு நியமிக்கும் ஒருங்கிணைப் பாளார் மூலம் நாட்டுக்கோழிப் பண்ணை தொழில் தொடங்குவோருக்கு கோழிக்குஞ்சுகள் வழங்கப்படும். கிராம ஊராட்சிப் பகுதிகளில் வசிப்பவர் கள் மட்டுமே இத்திட்டத்தில் பயனடைய முடியும். ஏற்கெனவே சிறிய அளவில் இத்தொழில் செய்வோருக்கு அபிவிருத்தி செய்யும் நோக்கில் இத்திட்டத்தில் சேர்ந்து பயனடையலாம். திட்டத்தில் பயனடைய விரும்புவோர் முழு விவரங்கள் தெரிந்து கொள்ள அருகிலுள்ள கால்நடை நிலைய கால்நடை மருத்துவாகளை அணுகவும், வங்கிக்கடன் பெற தங்கள் பகுதி வங்கி மேலாளா்களை அணுகலாம்.

## 18இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளுக்கான குறைதீர் கூட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் வியாழக்கிழமை (ஜூன் 18) நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ம.ரவிகுமார் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மாவட்ட விவசாயிகள் குறைகளை கேட்டறியும் வகையில் மாதம்தோறும் குறைதீர் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, ஜூன் மாதத்துக்கான கூட்டம் வரும் வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் விவசாய சங்கத் தலைவர்களும், பாசன சங்கப் பிரதிநிதிகளும் மற்றும் விவசாயிகளும் கலந்துகொண்டு தங்கள் குறைகளை தெரிவித்து பயன்பெறலாம் என செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "கோழிப்பண்ணை அமைக்க விரும்புவோர் விண்ணப்பிக்கலாம்'

தூத்துக்குடி மாவட்டத்தில் கோழிப்பண்ணை அமைக்க விரும்புவோர் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து மாவட்ட

ஆட்சியர் ம. ரவிகுமார் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தமிழக அரசு கோழிப் பண்ணைத் தொழிலை ஊக்குவிக்கும் வகையில், கோழி வளர்ப்புத் திட்டத்தை கால்நடை பராமரிப்புத் துறை மூலம் கடந்த மூன்று ஆண்டுகளாக செயல்படுத்தி வருவதோடு, நிகழாண்டும் செயல்படுத்த அரசாணை வழங்கியுள்ளது. தூத்துக்குடி மாவட்டத்தில் கிராமப் புறங்களில் 5ஆயிரம் கறிக்கோழிகள் கொண்ட கோழிப்பண்ணை அமைக்க ஆர்வமுள்ளவர்களுக்கு திட்ட மதிப்பீடான ரூ.10.75 லட்சத்துக்கு தமிழக அரசு மற்றும் நபார்டு வங்கி இணைந்து 50 சதவீத மானியத் தொகையாக ரூ.5.38 லட்சம் வழங்குகிறது. 250 நாட்டுக்கோழிகள் கொண்ட கோழிப்பண்ணை அமைக்க ஆர்வமுள்ளவர்களுக்கு திட்ட மதிப்பீடான ரூ.1.29 லட்சத்துக்கு அரசு மற்றும் நபார்டு வங்கி இணைந்து 50 சதவீதம் மானியத்தொகையாக ரூ. 65 ஆயிரம் வழங்குகிறது. மேலும், தாழ்த்தப்பட்டோருக்கு கோழிப் பண்ணை அமைக்க தமிழக அரசின் 25 சதவீத மானியம் மற்றும் நபார்டு வங்கியின் 33 சதவீத மானியம் என மொத்தம் 58 சதவீதம் மானியமாக வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் கோழிப்பண்ணை அமைக்க விருப்பமுள்ளவர்கள் வங்கிகள் மூலம் கடன் பெற்றோ அல்லது சுய மூலதனம் மூலமாகவோ பண்ணை அமைக்கலாம். சுய மூலதனம் மூலம் கோழிப்பண்ணை அமைப்பவர்களுக்கு தமிழக அரசின் 25 சதவீத மானியம் மட்டுமே வழங்கப்படும். 5000 கறிக்கோழி வளர்க்க தேவையான நிலம், கோழி ஒன்றுக்கு ஒரு சதுர அடி வீதம் 5000 சதுர அடி சொந்தமாக கிராமப்புறங்களில் இருத்தல் வேண்டும். 250 நாட்டுக் கோழிகள் வளர்க்க தேவையான நிலம், 250 சதுரஅடி சொந்தமாக கிராமப்புறங்களில் இருத்தல் வேண்டும். வங்கி கடன் மூலம் பண்ணை அமைக்க விருப்பம் உள்ளவர்கள் வங்கி கடன் பெறத் தகுதியுள்ளவராக இருத்தல் வேண்டும். தகுதியுள்ளவர்கள் அருகில் உள்ள கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவரை அணுகி விண்ணப்பங்களை பெற்று விண்ணப்பிக்கலாம். மேலும், விவரங்களுக்கு தூத்துக்குடி

கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் (9445032545), கோவில்பட்டி உதவி இயக்குநர் (9445032588), திருச்செந்தூர் உதவி இயக்குநர் (9445001204) ஆகியோரை அணுகலாம் என செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 411 காசாக உயர்ந்தது**



நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை வரலாறு காணாத அளவுக்கு, 411 காசாக என்.இ.சி.சி உயர்த்தியுள்ளது. நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை கடந்த மாதத்தின் இறுதியில் இருந்து தொடர்ந்து உயர்ந்து வருகிறது. வாரம் 4 முறை விலை உயர்த்தப்பட்டது. தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு (என்.இ.சி.சி) நேற்று முட்டை விலையில் 9 காசு உயர்த்தியுள்ளது. இதன் மூலம் ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 411 காசாக உயர்ந்துள்ளது. கோழிப்பண்ணை தொழிலில் இதுவே முட்டையின் அதிகபட்ச விலை. அதே போல 23 நாட்களில் முட்டை விலையில் 100 காசுகள் உயர்ந்துள்ளதும் முதன்முறையாகும். கடந்த 2013 நவம்பர் 25 முதல் டிசம்பர் 7 வரை முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 402 காசாக இருந்தது. அப்போது கடுமையான குளிர்காலம், முட்டை நுகர்வு அதிகமாக இருந்தால் விலை உயர்த்தப்பட்டது. தற்போது கோடைக் காலத்தில் முட்டை விலையை உயர்த்தியுள்ளனர். முட்டை விலை உயர்வு குறித்து பண்ணையாளர்கள் கூறுகையில், ‘‘சத்துணவு முட்டை

டெண்டரில் தனியார் நிறுவனம் நல்ல லாபம் பார்க்கும் நோக்குடன் தொடர்ந்து விலை உயர்த்தப்படுகிறது. இதற்கு தெலங்கானா மாநிலத்தில் கோழிகள் இறந்ததால் முட்டைக்கு டிமாண்ட் ஏற்பட்டுள்ளதாக காரணம் சொல்கின்றனர். அருகில் உள்ள ஆந்திர மாநிலம் ஐதாராபாத், விஜயவாடா மண்டலங்களில் முட்டை விலை நாமக்கல்லை விட 25 காசு குறைவாக தான் உள்ளது. தெலுங்கானாவில் கோழிகள் இறந்து முட்டை உற்பத்தி பாதித்தால், பக்கத்து மண்டலத்தில் ஏன் முட்டை விலை உயர்த்தப்படவில்லை'' என்றனர். என்.இ.சி.சி அதிரடியாக உயர்த்தி வரும் முட்டை விலையேற்றத்தால் தினமும் பல லட்சம் முட்டை உற்பத்தி செய்யும் பெரிய பண்ணையாளர்கள் நல்ல லாபம் பார்த்து வருகின்றனர். முட்டை விலை உயர்வு குறித்து நாமக்கல் மண்டல என்.இ.சி.சி தலைவர் செல்வராஜ் கூறியதாவது: குளிர்பதன கிடங்குகளில் முட்டை வியாபாரிகள் சேமித்து வைத்திருந்த முட்டைகள் விற்பனையாகி விட்டன. எனவே, அவர்கள் தொழிலை தொடர்ந்து நடத்த பண்ணையாளர்களிடம் தற்போது உள்ள முட்டையை வாங்கியே தீரவேண்டும். அப்போது தான் முட்டை வியாபாரிகள் வடமாநிலங்களில் தொழில் செய்ய முடியும். கேரளாவில் வரும் 31ம் தேதி வரை கடலில் மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே, அங்கு முட்டை தேவை அதிகரிக்கும். எனவே பண்ணையாளர்கள் பதற்றம் அடையவேண்டாம். இனி மேல் முட்டைக்கு நல்ல விலை கிடைக்கும் என்றார். ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ.69, ஒரு கிலோ கறிக்கோழி ரூ.90. மற்ற மண்டலங்களில் முட்டை விலை விபரம்: (காசுகளில்) பெங்களூரு 420, மைசூர் 424, ஐதராபாத் 387, மும்பை 426, விஜயவாடா 382, கொல்கத்தா 407, டெல்லி 363 காசுகள்.

## நறுமண பொருட்கள் ஏற்றுமதி 9 சதவீதம் அதிகரிப்பு



புதுடெல்லி: வெளிநாடுகளில் தேவை அதிகரிப்பால் மிளகு, மிளகாய், மஞ்சள் உள்ளிட்டவற்றின் நறுமண பொருட்கள் ஏற்றுமதி கடந்த நிதியாண்டில் 9 சதவீதம் அதிகரித்துள்ளது. மொத்தம் ரூ.14,900 கோடி மதிப்புள்ள ரூ.8,93,920 டன் நறுமண பொருட்கள் ஏற்றுமதி ஆகியுள்ளது. முந்தைய நிதியாண்டில் ரூ.13,735.39 கோடி மதிப்புள்ள 8,17,250 டன் நறுமண பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இவற்றில் மிளகாய் ஏற்றுமதி அதிக அளவில் அதாவது, 3,47,000 டன் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. புதினா மற்றும் புதினா சார்ந்த தயாரிப்பு பொருட்கள் 25,750 டன், சீரகம் 1,55,500 டன், மிளகு 21,450 டன், மஞ்சள் 86,000 டன் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

## பாசன வசதி பெறும் உபவடி நிலத்தில் உலக வங்கி குழு ஆய்வு

பொள்ளாச்சி, : நீர்வள நிலவளத்திட்டத்தின்கீழ் விவசாய பாசனம் பெறும் உபவடி நிலங்களை பொள்ளாச்சி பகுதியில், உலக வங்கி குழுவினர் நேற்று ஆய்வு மேற்கொண்டனர்.பொள்ளாச்சி அருகே பாலாறு மற்றும் ஆழியார் படுகையில், உலக வங்கி நிதியுதவியுடன் நீர்வள நிலவளத்திட்டத்தின் கீழ், விவசாய பாசனம்பெறும் வசதியாக உபவடிநில திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதன் செயல்பாடு இந்த மாதத்துடன் நிறைவடைவதையடுத்து, இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்ட பணி குறித்து, உலகவங்கி குழுவினர் நேற்று ஆய்வு மேற்கொண்டனர். இதில் உலக வங்கி திட்டக்குழுவை சேர்ந்த

பொருளாதார நிபுணர் பிளாகாஅமெக், உலகவங்கி நிபுணர் ஜிம்சன்நிர்பா ஆகியோர் ஆழியார் படுகையில் ஆழியார், துறையூர் பகுதியிலும். பாலாறு படுகையில் வீரல்பட்டி பகுதியிலும் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது, இந்த திட்டத்தின் பயன்குறித்து விவசாயிகளிடம் கேட்டறிந்தனர். இந்த ஆய்வின்போது பொதுப்பணித்துறை தலைமை கண்காணிப்பு பொறியாளர் இளங்கோவன், செயற்பொறியாளர் சிவசுப்பிரமணியம், ஜெயகோபாலன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். இதையடுத்து உலக வங்கி குழுவினர் கூறுகையில், 'உலக வங்கி நிதி உதவியுடன் நீர்வள நிலவளத்திட்டத்தின்கீழ் 2007-2008ம் ஆண்டு விவசாயிகள் பாசனம்பெறும் வகையில் உபவடி நில திட்டம் சுமார் ரூ.2544கோடியில் துவங்கப்பட்டது. இதற்காக தோட்டக்கலை, கால்நடைத்துறை, பொதுப்பணித்துறை உள்ளிட்ட 8 துறைகளை சேர்ந்தவர்கள் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்ட இந்த நீர்வள நிலவளத்திட்டம் இம்மாதத்துடன் நிறைவடைகிறது. இந்த திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்ட உபவடி நிலங்களின் செயல்பாடு மற்றும் மேற்கொள்ளப்பட்ட பணிகுறித்து ஆய்வு செய்யப்படுகிறது. சென்னை, திருச்சிக்கு பிறகு தற்போது கோவை மாவட்டத்தில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. உலக வங்கி நிதி உதவியுடன் நீர்வள நிலவளத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் உபவடிநில பயன்பாடு குறித்து விவசாயிகளிடம் கலந்துரையாடப்படுகிறது. இதுகுறித்த ஆய்வு அறிக்கை உயர் அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்படும்' என்றனர்.

## 1.3 கோடி மாடுகளுக்கு கோமாரி தடுப்பூசி போட உத்தரவு

கோவை, : தமிழகத்தில் வரும் செப்டம்பர் மாதம் 1.3 கோடி மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட உத்தரவிடப்பட்டுள்ளது. தமிழகத்தில்

கடந்த 2013ம் ஆண்டில் செப்டம்பர், அக்டோபர் மாதத்தில் கோமாரி என்ற கால், வாய்ப்புண் நோய் மாடுகளுக்கு பரவியது. இதில் மாநில அளவில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாடுகள் இறந்தன. இதை தொடர்ந்து, நோய் தடுப்பு நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டது. நோய் கட்டுப்பாட்டிற்குள் வந்த நிலையில், கடந்த ஆண்டு நாகர்கோவில், கன்னியாகுமரி உள்ளிட்ட மாவட்டங்களில் மாடுகளுக்கு கோமாரி நோய் அறிகுறி இருப்பதாக தெரியவந்தது. இதைதொடர்ந்து மாநில அளவில், கோமாரி நோய் தடுப்பூசி பணி ஆண்டிற்கு இரு முறை நடத்த தமிழக அரசு, கால்நடை பராமரிப்பு துறைக்கு உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பாக கிராம மக்களுக்கு விவரம் தெரிவிக்கும் வகையில் வரும் கிராம சபா கூட்டம் நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டது. கோவை மாவட்டத்தில் கடந்த மார்ச் மாதம் 2.45 லட்சம் மாடுகளுக்கும், திருப்பூரில் 2.3 லட்சம் மாடுகளுக்கும், ஈரோட்டில் 2.6 லட்சம் மாடுகளுக்கும் தடுப்பூசி போடப்படும். மாநில அளவில் 1.3 கோடி மாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. தற்போது நடப்பாண்டில் இரண்டாம் கட்டமாக, செப்டம்பர் முதல் தேதியில் இருந்து ேகாமாரி நோய் தடுப்பூசி பணி நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. 1.3 கோடி மாடுகளுக்கு தடுப்பூசி போடப்படும். இந்த முறை எருமைகளுக்கும் தடுப்பூசி போட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கால்நடை பராமரிப்பு துறையினர் கூறுகையில், ''கோமாரி நோய் தடுப்பூசி போட்டால் 6 மாதம் நோய் பரவாது. பிறகு நோய் பரவும் நிலையிருப்பதால், மீண்டும் தடுப்பூசி போட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அனைத்து மாடு, எருமைகளுக்கு தடுப்பூசி போடப்படும். விவசாயிகள் கால்நடை பராமரிப்பு துறையினர் அல்லாத போலி நபர்கள் தடுப்பூசி போட வருவதாக கூறினால் நம்பி ஏமாந்து விடக்கூடாது. மாடுகளுக்கு வாயில் புண் ஏற்பட்டால் உடனடியாக அருகேயுள்ள கால்நடை மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சை தரவேண்டும். கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்கம் இருக்கிறதா என அடிக்கடி கண்காணித்து வருகிறோம்,'' என்றனர். கோவை, :

தமிழகத்தில் வரும் செப்டம்பர் மாதம் 1.3 கோடி மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட உத்தரவிடப்பட்டுள்ளது. தமிழகத்தில் கடந்த 2013ம் ஆண்டில் செப்டம்பர், அக்டோபர் மாதத்தில் கோமாரி என்ற கால், வாய்ப்புண் நோய் மாடுகளுக்கு பரவியது. இதில் மாநில அளவில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாடுகள் இறந்தன. இதை தொடர்ந்து, நோய் தடுப்பு நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டது. நோய் கட்டுப்பாட்டிற்குள் வந்த நிலையில், கடந்த ஆண்டு நாகர்கோவில், கன்னியாகுமரி உள்ளிட்ட மாவட்டங்களில் மாடுகளுக்கு கோமாரி நோய் அறிகுறி இருப்பதாக தெரியவந்தது. இதைதொடர்ந்து மாநில அளவில், கோமாரி நோய் தடுப்பூசி பணி ஆண்டிற்கு இரு முறை நடத்த தமிழக அரசு, கால்நடை பராமரிப்பு துறைக்கு உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பாக கிராம மக்களுக்கு விவரம் தெரிவிக்கும் வகையில் வரும் கிராம சபா கூட்டம் நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டது. கோவை மாவட்டத்தில் கடந்த மார்ச் மாதம் 2.45 லட்சம் மாடுகளுக்கும், திருப்பூரில் 2.3 லட்சம் மாடுகளுக்கும், ஈரோட்டில் 2.6 லட்சம் மாடுகளுக்கும் தடுப்பூசி போடப்படும். மாநில அளவில் 1.3 கோடி மாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. தற்போது நடப்பாண்டில் இரண்டாம் கட்டமாக, செப்டம்பர் முதல் தேதியில் இருந்து ொகாமாரி நோய் தடுப்பூசி பணி நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. 1.3 கோடி மாடுகளுக்கு தடுப்பூசி போடப்படும். இந்த முறை எருமைகளுக்கும் தடுப்பூசி போட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கால்நடை பராமரிப்பு துறையினர் கூறுகையில், ‘‘கோமாரி நோய் தடுப்பூசி போட்டால் 6 மாதம் நோய் பரவாது. பிறகு நோய் பரவும் நிலையிருப்பதால், மீண்டும் தடுப்பூசி போட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அனைத்து மாடு, எருமைகளுக்கு தடுப்பூசி போடப்படும். விவசாயிகள் கால்நடை பராமரிப்பு துறையினர் அல்லாத போலி நபர்கள் தடுப்பூசி போட வருவதாக கூறினால் நம்பி ஏமாந்து விடக்கூடாது. மாடுகளுக்கு வாயில் புண் ஏற்பட்டால் உடனடியாக அருகேயுள்ள கால்நடை மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சை

தரவேண்டும். கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்கம் இருக்கிறதா என அடிக்கடி கண்காணித்து வருகிறோம்,'' என்றனர். கரூர்,: கரூர் மாவட்டத்தில் 2015ம் ஆண்டு ஜூன் மாதத்திற்கான விவசாயிகள் குறைதீர்க்குள் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் தலைமையில் ஜூன் 19ம்தேதி நடைபெறுகிறது.கரூர் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாக கூட்டரங்கில் ஜூன் 19ம்தேதி காலை 11மணிக்கு நடைபெற உள்ள இக்கூட்டத்தில், கரூர் மாவட்ட விவசாய சங்க உறுப்பினர்கள் அனைவரும் குறைதீர்க்கு நாள் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த மனுக்கள் மட்டுமே விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குறுவை நெற்பயிரில் கருப்பு வண்டு தாக்குதல்

கும்பகோணம், : தஞ்சை மாவட்டம் மெலட்டூர் பகுதியில் சுமார் 300 ஏக்கரில் குறுவை நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டம் மெலட்டூர் பகுதியில் கடந்த மாதம் பம்புசெட் மூலம் சாகுபடி செய்யப்பட்டுள்ள முன்பட்ட குறுவை நெற்பயிர்கள் தற்போது நல்ல செழிப்பாக இரண்டடி உயரத்துக்கு வளர்ந்துள்ளது. இந்நிலையில் கருப்பு வண்டு அதிகளவில் நெற்பயிரில் உள்ளது. இந்த வண்டுகளில் நெற்பயிரை உறிஞ்சி அதில் உள்ள சாரை உணவாக உட்கொள்வதால் நெற்பயிர் பழுப்பேறி காய்ந்து வருகிறது. அன்னப்பன்பேட்டை, மெலட்டூர், நரியனூர், திட்டை உள்ளிட்ட பகுதிகளில் முன்பட்ட குறுவையில் இந்த கருப்பு வண்டு தாக்குதல் உள்ளதால் குறுவை சாகுபடி பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். இதுகுறித்து அன்னப்பன்பேட்டை விவசாயி பாலசுப்பிரமணியன் கூறுகையில், மே மாதத்தில் ஆடுதுறை 43 ரக நெற்பயிரை நாற்றுவிட்டு நடவு செய்தோம். தற்போது நல்ல செழிப்பாக பயிர்கள் வளர்ந்திருந்தது. இப்போது ஒரு வார காலமாக கருப்பு வண்டுகள் அதிகளவில் பயிரில் உள்ளது. இந்த வண்டுகள் நெற்பயிரை உறிஞ்சுவதால் பயிர்கள் காய்ந்து

வருகிறது. இதனால் பயிர்கள் காய்ந்து கருகினால் பலன் ஏதும் இருக்காது. இந்த வண்டுகளை கட்டுப்படுத்த நாங்களும் பூச்சி கொல்லியை தெளித்து வருகிறோம். ஆனாலும் கட்டுப்படுத்த முடியவில்லை. எனவே வேளாண் அதிகாரிகள் எங்களது வயல்களில் கள ஆய்வு செய்து உரிய ஆலோசனை வழங்கினால் கருப்பு வண்டுகளை கட்டுப்படுத்த முடியும். இல்லையென்றால் குறுவை சாகுபடியில் பெரும் இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது என்றார்.

## <u>இன்று வாழைத்தார் பொது ஏலம்</u>

திருச்சி,: திருச்செந்துறை வணிக வளாகத்தில் வாழைத்தார் பொது ஏலம் இன்று நடைபெறுகிறது. ஸ்ரீரங்கம் தாலுகா, திருச்செந்துறையில் இயங்கி வரும் ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்தில் திருச்சி வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் வாழைத்தார் பொது ஏலம் இன்று (செவ்வாய்) நடைபெற உள்ளது. இந்த ஏலத்தில் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பதோடு எந்தவித கமிஷன் இல்லாமல் உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது. வாழைத்தார் கொண்டு வரும் விவசாயிகள் காலை 11 மணிக்குள் முன்பதிவு செய்ய வேண்டும். திருச்சி மாவட்டம், அந்தநல்லூர், மணிகண்டம், திருவெறும்பூர், லால்குடி, மண்ணச்ச நல்லூர், முசிறி, தொட்டியம் வட்டாரங்களை சேர்ந்த விவசாயிகள் மட்டுமல்லாமல் டெல்டா மாவட்ட விவசாயிகளும் வாழைத்தார்களை திருச்செந்துறை ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்துக்கு கொண்டு வந்து பொது ஏலத்தில் பங்கேற்கலாம்.

## <u>மாம்பழத்திலிருந்து மதிப்பூட்டப்பட்ட உணவு பதார்த்தம் தயாரித்தல் பயிற்சி</u>

நாகை, : நாகை மாவட்டம் சிக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் மாம்பழத்திலிருந்து மதிப்பூட்டப்பட்ட உணவு பதார்த்தங்கள் தயாரித்தல் குறித்து ஒரு நாள் தொழில்நுட்ப பயிற்சி நடைபெற்றது. பயிற்சியை திட்ட ஒருங்கிணைப்பாளர் அனுராதா தொடங்கி வைத்து பேசினார்.

மனையியல் துறை உதவிப் பேராசிரியர் செல்வி, மாம்பழத்தின் முக்கியத்துவம், நன்மைகள், சத்துக்கள், பதப்படுத்தும் விதம், மதிப்பூட்டப்பட்ட உணவு பதார்த்தங்கள் தயாரித்தல் குறித்து விளக்கினார். மேலும் பழ பானம், ஜாம், மாங்காய் தொக்கு ஆகியவற்றை தயாரித்து காண்பித்தார். பயிற்சியில் உதவி பேராசிரியர்கள் தமிழ்ச்செல்வன், திலகம், அழகர் மற்றும் பலர் கலந்து கொண்டனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை தொழில்நுட்ப திட்ட உதவியாளர் ஞானபாரதி செய்திருந்தார்.

## வரத்து குறைவால் செவ்வந்தி, பிச்சிப்பூ விலை உயர வாய்ப்பு வியாபாரிகள் தகவல்

மதுரை, : வரத்து குறைவால் மதுரை பூ மார்க்கெட்டில் செவ்வந்தி, பிச்சிப்பூக்களுக்கு அதிக மவுசு ஏற்பட்டுள்ளது. இதனால் பூக்களின் விலை உயர வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். மதுரை பூ மார்க்கெட்டில் மல்லிகை, முல்லைப்பூ வரத்து அதிகமாக உள்ளது. இதனால் பூக்கள் விலை குறைந்து விற்பனையாகிறது. அதே நேரத்தில் வரத்து குறைவு காரணமாக செவ்வந்தி, பிச்சிப்பூவுக்கு அதிக மவுசு ஏற்பட்டுள்ளது. இதனால் வரும நாட்களில் இப்பூக்களின் விலை தொடர்ந்து அதிகரிக்க வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். பூக்களின் நேற்றைய விலை (கிலோ) நிலவரம்: கனகாம்பரம் ரூ.100, பிச்சிப்பூ ரூ.120, சம்மங்கி ரூ.50, ரோஜா ரூ.50, அரளி ரூ.50, செவ்வந்தி ரூ.100, முல்லை ரூ.150, துளசி ரூ.40, கோழிக்கொண்டை ரூ.30, மரிக்கொழுந்து ரூ.40, மருள்(கட்டு) ரூ.10, மெட்ராஸ்மல்லி ரூ.100, தாமரை ஒரு பூ ரூ.3. பட்டன் ரோஸ் ரூ.100.

## நிலக்கடலையில் பூச்சி மேலாண்மை வேளாண்துறை ஆலோசனை

பழநி, : நிலக்கடலையில் பூச்சி மேலாண்மை குறித்து வேளாண் துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர்.தமிழகத்தில் சாகுபடி

செய்யப்படும் முக்கிய எண்ணெய் வித்து பயிர்களில் நிலக்கடலை, எள், ஆமணக்கு, சூரியகாந்தி ஆகியவை முக்கிய பயிர்களாக விளங்குகின்றன. தமிழகத்தில் சுமார் 5.02 லட்சம் ஹெக்டேர்களில் எண்ணெய் வித்து பயிர்கள் மானாவாரியாகவும், இறவையிலும் சாகுபடி செய்யப் படுகின்றன. எண்ணெய் வித்து பயிர்களில் நிலக்கடலை அதிகளவில் சாகுபடி செய்யப்படுபவை ஆகும். இதன் விளைச்சல் எக்டேருக்கு 2.15 டன்னாக உள்ளது. தமிழகத்தில் நிலக்கடலை மானாவாரியில் ஏப்ரல்-மே, ஜூன்-ஜூலை, ஜூலை-ஆகஸ்டு பட்டங்கள் மிகவும் உகந்தவை. இந்நிலக்கடலை பயிரிட பாத்தி அமைத்தல், உரமிடுதல், நுண் ஊட்டமிடுதல், ஊட்டச்சத்து கலவை தெளிப்பு, விதை அளவு, விதை நேர்த்தி, களை கட்டுப்பாடு, பாசனம் ஆகியவற்றை வேளாண் துறையினிடம் ஆலோசனை பெற்று அதன்படி கடைபிடித்தால் நல்ல விளைச்சல் பெறலாம்.அதுபோல் பூச்சி மேலாண்மையில் விவசாயிகள் அதிக அக்கறை காட்ட வேண்டும். கோடை மழைக்கு முன் வரப்புகளிலும், நிழலான இடங்களிலும், மண்ணில் புதைந்துள்ள கூட்டுப்புழுக்களை உழவு செய்து வெளிக்கொண்டு வந்து அழிக்க வேண்டும். விளக்குப்பொறி அல்லது தீப்பந்தம் வைத்து தாய் அந்திப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்க வேண்டும். பயிர்களில் இடப்பட்டுள்ள முட்டைகளை சேகரித்து அழிக்க வேண்டும். தாக்கப்பட்ட வயல்களைச் சுற்றி 30 சென்டி மீட்டர் ஆழம் மற்றும் 25 சென்டி மீட்டர் அகலத்தில் செங்குத்தாக குழிகள் அமைத்து புழுக்கள் பாதிக்கப்பட்ட வயல்களில் இருந்து பரவுவதை தடுக்க வேண்டும். எக்டருக்கு 25 கிலோ என்ற அளவில் பாசலோன் 4%, கார்பாரில் 10%, பெனிட்ரோதியான் 2% ஆகியவை கலந்து தெளிக்க வேண்டும். 1 எக்டேருக்கு சூடோமோனாஸ் ஃபுளூரசன்ஸ் 2.5 கிலோவுடன், 50 கிலோ மக்கிய தொழுவுரத்தை கலந்து தெளிக்க வேண்டும். மேலும், நோய் தென்படும் இடங்களில் கார்பன்டாசிம் லிட்டருக்கு 1 கிராம் என்ற அளவில் கலந்து தெளித்தால்

பூச்சிகளின் தாக்குதல் இருக்காது. இதுதொடர்பான கூடுதல் தகவல்களுக்கு அந்தந்த பகுதி வேளாண் அலுவலர்களையோ அல்லது வேளாண் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

**<u>வேம்பு கலந்த உரத்தை பயன்படுத்த விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்</u>**

சிவகங்கை, : விவசாயிகள் வேம்பு கலந்த உரத்தை பயன்படுத்த வேண்டும் என வேளாண்துறை சார்பில்அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதுகுறித்து மாவட்ட வேளாண் இணை இயக்குநர் குருமூர்த்தி, உதவி இயக்குநர் (தரக்கப்பட்டுப்பாடு) கதிரேசன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: புதிய உரக்கொள்கையின்படி உற்பத்தி செய்யப்படும் யூரியா உரத்தில் குறைந்தது 75 சதவீத வேம்பு கலந்த யூரியாவை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்திட உற்பத்தி நிறுவனங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. விவசாயிகள் உரக்கடைகளில் வேம்பு கலந்த யூரியாவை கேட்டு வாங்கி பயன்படுத்தி பிற யூரியாக்கள் தேவையை குறைக்கலாம். நாம் ஏற்கனவே பயன்படுத்தும் யூரியாவில் 60 சதவீத நைட்ரஜன் சத்து வீணாக்கப் படுகிறது. வேம்பு கலந்த யூரியாவை பயன்படுத்துவதால் இது குறைக்கப்படுகிறது. மண்ணில் உள்ள நைட்ரோபேக்டர் என்ற பாக்டீரியா நாம் இடும் யூரியாவில் உள்ள தழைச்சத்தினை வேகமாக கரையச்செய்கிறது. வேம்பு கலந்த யூரியாவிலுள்ள டிரைட்டர்பென்ஸ் என்ற பொருள் நைட்ரோபேக்டர் செயல்பாட்டை குறைத்து யூரியாவிலுள்ள தழைச்சத்தினை பயிர் தேவைக்கேற்ப கொடுக்கிறது. எனவே, யூரியா தேவை குறைக்கப்படுவதோடு, யூரியாவில் வேம்பு கலந்து இருப்பதால் ஒரு சிறந்த உயிர் பூச்சிக்கொல்லியாகவும், மண்ணிலுள்ள கரையான், நூற்புழுக்களையும் கட்டுப்படுத்துகிறது. எனவே, வேம்பு கலந்த யூரியாவைப் பயன்படுத்தி விவசாயிகள் பயன்பெற வேண்டும். வேம்பு கலந்த யூரியாவை அரசு அதிகளவு

உற்பத்தி செய்து விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வேம்பு கலந்த யூரியாவை தொழிற்சாலைகளுக்குப் பயன்படுத்த முடியாக காரணத்தினால் பருவ காலங்களில் யூரியா தேவைக்கேற்ப கிடைக்கும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>கரும்பு விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலை அதிகாரிகள் செயல்விளக்கம்</u>**

ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை சார்பில் கரும்பு பயிரில் வறட்சி மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளிக்கும் முகாம் நடந்தது. ஆரணி, வித்துவான்தாங்கல், வெள்ளேரி, சிறுமூர் ஆகிய பகுதிகளில் உள்ள கரும்பு வயல்களில் இந்த செயல்விளக்க முகாம்கள் நடத்தப்பட்டன. நிகழ்ச்சியில் கரும்பு அபிவிருத்தி அலுவலர் வி.ஆர்.விவேகானந்தன் தலைமையில் வறட்சி மேலாண்மை குறித்து பேசினர். முகாமிற்கு தலைமை தாங்கிய மேலாண்மை இயக்குனர் கா.ஜெயம், தண்ணீர் பற்றாக்குறை காலத்திலும் நிலத்தடி நீர் குறைந்த அளவு இருந்தாலும் கரும்பு பயிரை காப்பாற்ற புதிய தொழில்நுட்ப முறைகள் குறித்து விளக்கம் அளித்தார். முகாமில் ஆரணி கோட்ட கரும்பு அலுவலர் மு.வேலாயுதம், ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை கரும்பு விவசாயிகள் சங்க துணை தலைவர் அசோக்குமார், கரும்பு விவசாயிகள் எம்.ராமதாஸ், ரவி, கன்றாயன், நடராஜன், ராஜா, வெங்கடபதி, பழனி, குமார் உள்பட 50–க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**கள்ளக்குறிச்சி ஒழுங்குமுறை கூடத்தில் ரூ.38 லட்சத்துக்கு தானியங்கள் விற்பனை**



கள்ளக்குறிச்சி, கள்ளக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ரூ.38 லட்சத்துக்கு தானியங்கள் விற்பனை ஆனது.

ஒழுங்குமுறை விற்பனை கூடம்

கள்ளக்குறிச்சியில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு தியாகதுருகம், ரிஷிவந்தியம், சின்னசேலம், கச்சிராயப்பாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து விவசாயிகள் தங்கள் விளைநிலங்களில் விளையும் தானியங்களை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். அந்தவகையில் நேற்று 600 எள் மூட்டைகள், 400 மக்காச்சோளம் மூட்டைகள், 45 கம்பு மூட்டைகள், 10 உளுந்து மூட்டைகள் உள்பட மொத்தம் 1,800 மூட்டைகள் வந்திருந்தன.

ரூ.38 லட்சத்துக்கு விற்பனை

இதனை வாங்குவதற்காக விழுப்புரம், விருதுநகர், ஈரோடு உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து ஏராளமான வியாபாரிகள் வருகை தந்து விவசாயிகளின் விளைபொருட்களை போட்டி போட்டு வாங்கி சென்றனர். ஒரு மூட்டை (80 கிலோ) எள் ரூ.6 ஆயிரத்து 419–க்கும், ஒரு மூட்டை (100 கிலோ) மக்காச்சோளம் ரூ.1,342–க்கும், ஒரு மூட்டை (100 கிலோ) உளுந்து ரூ.8ஆயிரத்து 760–க்கும் என மொத்தம் ரூ.38 லட்சத்திற்குவிற்பனையானது.

<u>**குத்தகை காலம் முடிவடைந்ததை அடுத்து ரங்கப்பனூர் பெரிய ஏரியில் மீன்பிடிக்க பொதுமக்கள் திரண்டனர்**</u>



மூங்கில்துறைப்பட்டு குத்தகை காலம் முடிவடைந்ததை அடுத்து ரங்கப்பனூர் பெரிய ஏரியில் மீன்பிடிக்க பொதுமக்கள் திரண்டனர்.

<u>பெரிய ஏரி</u>

மூங்கில்துறைப்பட்டு அருகே ரங்கப்பனூர் உள்ளது. இங்கு ஊரின் அருகில் பெரிய ஏரி உள்ளது. இந்த ஏரியில் ஆண்டு தோறும் மீன் குஞ்சுகள் வளர்க்கப்பட்டு அதனை ஏலம் விடுவார்கள். ஏலத்தின் காலம் முடிந்தவுடன் மீதம் உள்ள மீன்களை சுற்றுவட்ட பகுதியை சேர்ந்த பொதுமக்கள் பிடித்து செல்வார்கள்.

<u>மீன் பிடித்தனர்</u>

இதனையடுத்து நேற்று முன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) குத்தகை காலம் நிறைவடைந்தது. தொடர்ந்து நேற்று (திங்கட்கிழமை) முதல் ஏரியில் பொதுமக்கள் மீன்பிடிக்கலாம் என ஊராட்சி சார்பாக அறிவிக்கப்பட்டது. அதனைதொடர்ந்து மூங்கில்துறைப்பட்டு சுற்றுவட்ட பகுதிகளான புதுப்பட்டு, புத்திராம்பட்டு, ராவத்தநல்லூர், லக்கிநாயக்கன்பட்டி, புளியங்கொட்டை உள்ளிட்ட பகுதியை சேர்ந்த பொதுமக்கள் நேற்று காலை 7 மணிக்கே பெரிய ஏரிக்கு வந்து மீன்பிடிக்க தொடங்கினர். அவர்கள் கெண்டை உள்ளிட்ட பல்வேறு மீன்களை வலைவிரித்தும், கையாலும் பிடித்தனர். இந்த காட்சியை பார்க்கும் போது மீன்பிடி திருவிழா போல காணப்பட்டது.